**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 137/2023 P.W. 4 Additional Witness

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜகுமார் (தலைமை காவலர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. கனகப்பன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 10.06.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது தக்கலை காவல் நிலையத்தில் தலைமை காவலளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் சிறப்பு உதவிய ஆய்வாளராக பணிபுரிந்த விஷ்ணுகுமார் மற்றும் உதவி ஆய்வாளர்கள் முரளி மற்றும் சிதம்பரதாணு ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை ஆவணங்களின் அடிப்படையில் நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 30.06.2019 ம் தேதி 19.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவிய ஆய்வாளராக பணிபுரிந்த விஷ்ணுகுமார் என்பவருக்கு ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று 20.00 மணிக்கு மருத்துவனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்து அகில் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையம் ஆஜராகி புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 347/2019 சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 324 இதச-ன் படி வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் முரளி அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 01.07.2019ம் தேதி 09.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரெட்லின்டினோ மற்றும் அஜின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை

மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார்.

4. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை திரு.விஷ்ணுகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். மேலும் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உதவி ஆய்வாளர் முரளி அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்ட காரணத்தினால் வழக்கு கோப்பை உதவி ஆய்வளார் திரு. சிதம்பரதாணு என்பவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காயம்பட்ட நபருக்கு மருத்துவச் சான்று பெற்று சிகிச்சை அளித்த மருத்துவர் அன்வர்சாகிப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ. 7 குறியீடு செய்யப்படுகிறது.** சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டப்பிரிவுகள் 294(பி), 325, 326 இதச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார், **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 325, 326 இதசன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1
பத்மனாபபுரம்.